
வாய்மொழி வரலாறுகள்

03

# முருகன் சின்னையா வாய்மொழி வரலாறு



பன்றித்தலைச்சி அம்மன்
ஆலயப் பிரவேசம் தொடக்கம்
பல்வேறு சாதி எதிர்ப்புப்
போராட்டங்களின்
வரலாற்றுப்பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் சின்னையா வாய்மொழி வரலாறு

நேர்காணல்
க. பரணீதரன்

தொகுப்பும் பதிப்பும்
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி வரலாறுகள் வரிசை - 03

**முருகன் சின்னையா**
**வாய்மொழி வரலாறு**

| | |
|---|---|
| நேர்காணல் | : க.பரணீதரன் |
| தொகுப்பும் பதிப்பும் | : தி.கோபிநாத், க.பரணீதரன் |
| உரிமம் | : CC BY-SA 4.0 (Creative Commons-Attribution-ShareAlike) |
| வடிவமைப்பு | : க.பரணீதரன் |
| வெளியீடு | : ஜீவநதி, கலைஅகம், அல்வாய் |
| அச்சகம் | : பரணி அச்சகம், நெல்லியடி. |
| பக்கங்கள் | : 52 |
| முதலாம் பதிப்பு | : 2024 கார்த்திகை |
| விலை | : 250/- |
| ISBN | : 978-624-6601-24-9 |

ஜீவநதி வெளியீடு - 393



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஜீவநதியின் 393 ஆவது வெளியீடாக ஜீவநதி தொடராக வெளியிட்டு வரும் "வாய்மொழி வரலாறுகள்" நூல் வரிசையின் மூன்றாவது நூலாக பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பிரவேசப் போராட்டம், மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயப் பிரவேசப் போராட்டம், தேநீர் கடைப் பிரவேசப் போராட்டங்கள் உட்பட பல்வேறு சாதித் தகர்ப்புப் போராட்டங்களில் முன்னின்று இரத்தம் சிந்திப் போராடிய முருகன் சின்னையா அவர்களது வாய்மொழி வரலாறு வெளி வருகின்றது. முருகன் சின்னையா மிகவும் அமைதியான எளிமையான மனிதர். மிகப் பரந்த சிந்தனை வீச்சுள்ள மனிதராக அவருடன் உரையாடியதன் மூலம் உணர்ந்து கொண்டேன். மனிதனை மனிதனாக மதிக்க வேண்டும் எல்லோரையும் சமமாக மதிக்கும் இயல்புடையவனே மனிதனாக வாழத் தகுதியுடையவன் என்ற கருத்தை கொண்டவராகவும் சமூகத்திற்காக பேராடுகின்ற போது எந்த தனிப்பட்ட முக்கியத்துவமோ, பாராட்டோ, புகழ் மாலையோ தேவையில்லை என்ற தீர்க்கமான சிந்தனையையுடைய மனிதராக இவர் விளங்கினார்.

சாதிய எதிர்ப்பு போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டதால் எத்தனையோ இழப்புகளை அவமானங்களை புறக்கணிப்புகளை இவர் சந்தித்தார். ஆனால் எந்த இடத்திலும் தனது போராட்ட குணத்தை இவர் விட்டு விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான மனிதர்களின் சமூக நோக்கான சிந்தனைகளே இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னோக்கி செல்வதற்கான அடித்தளமாக அமைந்துள்ளன. எத்தனை எத்தனை துன்பங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்துள்ளார்கள் என்பதை இவர்களது வாய்மொழி வரலாறு மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறானவர்களின் வாய்மொழி வரலாறுகள் வரலாற்றுப் பதிவுகளாகக் கொள்ளத்தக்கன. இவற்றில் மிகுந்த உண்மைத் தன்மை காணப்படுகின்றன. ஒரு காலகட்டத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு இவ்வாறான வாய்மொழி வரலாற்றுப் பதிவுகள் அவசியம் என்ற அடிப்படையில் இந்நூல் வெளியாகின்றது. நூலக நிறுவனத்தில் நான் பணியாற்றிய காலத்தில் இவ்வாய்மொழி வரலாற்றுப் பதிவு மேற்கொள்ளப்பட்டது. தில்லைநாதன் கோபிநாத் அவர்கள், ஈழத்தில் நூலக நிறுவனம் ஊடாக வாய்மொழி வரலாற்றை முதன் முதலில் அறிமுகம் செய்தார். அவருடைய கடும் பிரயத்தனத்தின் மூலமே இவ்வாய்மொழி வரலாறுகள் பதிவு செய்யப்பட்டன. அவரும் நானுமாக இணைந்து இந்நூற் தொடரை வெளிக்கொணர்வதில் பெரிதும் மகிழ்கின்றேன். மேலும் இவ்வேளையில் என்னை சின்னையா அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்ற எழுத்தாளர்களான கே.ஆர்.டேவிட், மு.அநாதரட்சகன் ஆகியோருக்கு என் நன்றி. இவ்வரிய வாய்மொழி வரலாற்றை தந்தமைக்காக தற்போது அமரர் ஆகி உள்ள முருகன் சின்னையாவுக்கு எங்கள் நன்றி.

– க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் சின்னையா
# வாய்மொழி வரலாறு

இந்த வாய்மொழி வரலாற்று நேர்காணலானது நூலக நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் செயற்றிட்டம் மூலம் பதிவு செய்யப்பட்டதாகும். நூலக நிறுவனத்தில் பணியாற்றிய கலாமணி பரணீதரனால் பதிவு செய்த இந்த நேர்காணல் இயல்பான ஓர் உரையாடலாகவே பதிவுசெய்யப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

பரணீ:

வணக்கம் ஐயா. உங்களுடைய பெயரை ஒரு தடவை கூறிக் கொள்ளுங்கள்.?

முருகன் சின்னையா :

*முருகன் சின்னையா*

பரணீ:

நீங்கள் பிறந்த திகதி ஐயா?

முருகன் சின்னையா :

*10.01.1938*

பரணீ:

உங்களுடைய பெற்றோர் பற்றிக் குறிப்பிடுங்கள்?

முருகன் சின்னையா :

*என்னுடைய தகப்பனுடைய பெயர் கந்தன் முருகன். தாயாருடைய பெயர் முருகன் ஆச்சிப்பிள்ளை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

உங்களுடைய தந்தை செய்த தொழில் ஐயா?

முருகன் சின்னையா :

இவர் ஒரு கமக்காரன். தவிர கூலி வேலைகளும் செய் தார். தாயாரும் கூட விவசாயக் கூலி வேலைகளில் ஈடுபட்டார்.

குறிப்பாக கூறுமிடத்து அடிமட்ட வறுமைக்குள் வாழ்ந்த ஒரு குடும்பமாக எனது குடும்பம் அமைந்தது.

எனக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். என்னுடைய அக்கா அன்னமுத்து.

தங்கை நேசம்மா தற்போது மல்லாவியில் வாழ்ந்து வருகிறார்.

பரணீ:

உங்களுடைய வீடு எங்கு அமைந்திருந்தது?

முருகன் சின்னையா :

எனது வீடு மட்டுவில் மானாவளை எனும் குறிச்சியில் அமைந்திருக்கின்றது. அது தற்பொழுது கல்வயல் கிராம சேவகர் பிரிவில் அடங்கியுள்ளது.

பரணீ:

அக்காலத்தில் உங்களுடைய வீடு கல்வீடாக அமைந்திருந்ததா?

முருகன் சின்னையா :

கல்வீடல்ல மண்வீடு. அதிலும் மாரிகாலம் என்று சொன்னால் பெரும் சிரமப்பட வேண்டியிருந்தது. தரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரமாகி விடுவதால் ஏதாவது பலகைகளைப் போட்டு இரவில் உறங்குவோம்.

**பரணீ:**

**நீங்கள் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றீர்கள்?**

**முருகன் சின்னையா :**

ஆரம்பத்தில் எமது வீட்டிற்கு அருகாமையில் உள்ள பழம் பள்ளிக்கூடம் என்று சொல்லப்படுகின்ற கல்வயல் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். அதில் தலைமை ஆசிரியராக இராமுப்பிள்ளை என்ற கல்வயலைச் சேர்ந்த ஆசிரியர் பணியாற்றினார். இவர் காலஞ்சென்ற முருகையன், சிவானந்தன் போன்றோரின் தகப்பனார் ஆவார்.

அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு அனுமதிக்காது இருந்த நேரம், தலைமை ஆசிரியரான இராமுப்பிள்ளை துணிவாக தனது பாடசாலையில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளை அனுமதித்தார்.

அதனால் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் பெரும்பாலானோர் இப்பாடசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

கல்வி கற்கும் இடத்தில் இறுக்கமான சாதிக் கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்பட்டது.

எங்களுக்கென தனித் தனியான வாங்குகள் ஒழுங்கமைக்கப்பட்டது.

சாப்பிடும் நேரங்களில் உயர்சாதியினருக்கு மறைக்கப்பட்ட பகுதியில் உணவு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்ட வகுப்பினரான எங்களுக்கு வேறொரு பகுதியில் சாப்பிட அனுமதிக்கப்பட்டது.

உயர் சாதியினர் சாப்பிடுவதைப் பார்க்க கூடாது என்பதற்காக இவ்வாறு வழங்கப்பட்டது.

பரணீ:

சாப்பாடுகள் எவ்வாறு வழங்கப்பட்டது?

முருகன் சின்னையா :

உயர் சாதியினருக்கென தனியான கோப்பைகளும், எங்களுக்கென தனியான கோப்பைகளும் வழங்கப் பட்டது. சாப்பாடுகளை ஆசிரியர்கள் கோப்பைகளில் பரிமாறுவார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக் கென தனிக் கோப்பை வழங்கப்பட்டது.

பரணீ:

தண்ணீர் குடிப்பது தொடர்பில் எவ்வாறான பிரச்சினை ஏற்பட்டது?

முருகன் சின்னையா :

தண்ணீர் குடிப்பதில் பெரும் பிரச்சினை இருந்தது. கிணற்றில் நாங்கள் தண்ணீரை அள்ள முடியாது. அதே சமயத்தில் உயர் சாதியினரைக் கொண்டு தண்ணீர் அள்ள வேண்டும்.

பரணீ:

உங்களுக்கு தாகம் ஏற்பட்டால் உடனே தண்ணீர் அள்ளித் தருவார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சின்னையா :

அது மிகவும் சிரமமான விடயம். பொதுவாக இதில் அனேகம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். பெரும் பான்மையானவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தத னால் அங்கும் கூட தண்ணீர் தாகமெடுத்தால் உயர் சாதி மாணவர்களிடம் சென்று கூற வேண்டும். அவர் கள் அதிகார பூர்வமாக இன்னாருவரிடம் "தண்ணி அள்ளிக் குடு" என்று சொல்ல அவர்களிடம் இருந்து தண்ணீரைப் பெறவேண்டி இருந்தது.

பரணீ:

உடை எல்லாம் எவ்வாறு அமைந்தது. சீருடை இருந்ததா?

முருகன் சின்னையா :

இல்லை.

அப்போது சீருடை எல்லாம் இருக்கவில்லை. ஒவ்வொரு வரின் எண்ணங்கள் உயர்வுக்கு ஏற்ப ஆடைகள் அணியப்பட்டது.

பரணீ:

உடுப்புக் கட்டுப்பாடுகள் ஏதாவது இருந்ததா?

முருகன் சின்னையா :

இல்லை

பரணீ:

ஆசிரியர்கள் சாதிப் பிரிவினை காட்டினார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சின்னையா :

பிரித்துக் காட்டியது என்பதை விட அவர்களுக்கு கோபம் வரும்போது தாழ்த்தப்பட்டவர்களை இழித்துப் பழித்துக் காட்டினார்கள்.

பரணீ:

சாதிப் பெயர்களைச் சொல்லி இழிவாகப் பேசியிருக்கிறார்களா?

முருகன் சின்னையா :

இவ்வாறு இல்லை. "எடே" என்று மரியாதையில்லாமல் அழைத்திருக்கிறார்களே தவிர சாதிப் பெயரைச் சொல்லி பேசியதில்லை.

பரணீ:

நீங்கள் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் தாழ்த்தப் பட்டவர்களும் கற்பித்தலில் ஈடுபட்டார்களா?

முருகன் சின்னையா :

இல்லை.

அவ்வாறு இருக்கவில்லை.

பரணீ:

இராமுப்பிள்ளை தாழ்த்தப்பட்டவர்களை பாடசாலையில் இணைத்ததால் அவருக்கு பிரச்சினை ஏற்பட்டதா?

முருகன் சின்னையா :

இது நிச்சயமாக ஏற்பட்டது.

உயர்சாதியினருடன் கீழ் சாதியினரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைத்து கற்பிக்கிறார்கள் என்பத னால் கல்வயலில் பெரும்பாலான மாணவர்கள் எங்களுடைய பாட சாலைக்கு வருவதில்லை.

அதற்கு எதிராக அவர் தனது பிள்ளைகளையும், தனது உறவினரது பிள்ளைகளையும் இணைத்து கற்பித்தார்.

இன்று வரை முற்போக்கான சீர்திருத்த வாதியாகவே நான் இவரைக் கருதுகின்றேன். இன்றும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மதிப்பளிக்க விரும்புகின்றேன்.

**பரணீ:**

**இப் பாடசாலைக்கு பின்னர் எங்கு கல்வி கற்றீர்கள்?**

**முருகன் சின்னையா :**

மட்டுவில் மகாவித்தியாலயம் அக்காலத்தில் மட்டுவில் G.T.M.S என்று அழைக்கப்பட்டது. இவ் அரச பாட சாலையிலே கல்வி கற்றேன்.

**பரணீ:**

**இங்கு எத்தனையாம் வகுப்பு வரை கல்வி கற்றீர்கள்?**

**முருகன் சின்னையா :**

அங்கு O/L வரை கல்வி கற்றோம். இங்கு எங்களுக்கு என ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை. மற்றவர்களைப் போல சமனாக இருந்து கல்வி கற்க முடிந்தது.

நாங்கள் கிணற்றில் தண்ணீர் அள்ளுவது போன்ற பிரச்சினைகள் இங்கு இருக்கவில்லை. தண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ள முடிந்தது. இதுவொரு மாற்றம் அல்லது முன்னேற்றம் என்றே கருதுகின்றேன்.

**பரணீ:**

**இப்பாடசாலையில் வேறு சாதிப்பிரச்சினைகள் இருக்க வில்லையா?**

**முருகன் சின்னையா :**

பெரிதாகப் பிரச்சினைகள் எழாவிட்டாலும் கூட சமய விழாக்கள், சரஸ்வதிப் பூசை நடைபெறும் காலங்களில் இப்பாகுபாட்டை உணர முடிந்தது. மற்றும் கல்வி ஊக்குவிப்பு முன்னேற்ற விடயங்களில் ஏதாவது போட்டிகள், கலைவிழாக்கள் நடைபெறும் போது தாழ்த்தப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். திறமையானவர்களுக்கு பதிலாக சாதிய அடிப்படையில் பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டார்கள். அதனால் எங்களுடைய கல்வி முன்னேற்றமும், திறமைகளும் மறைக்கப்பட்டது.

குறிப்பாக நான் தரம் 8 கல்வி கற்கும் போது வடமாகாண கல்விச் சுற்றுலா பாடசாலையால் ஒழுங்கமைக்கப்பட்டது. இக் கல்விச் சுற்றுலாவில் பல இடங்களுக்குச் சென்று இடையில் யாழ்ப்பாண நகருக்குச் சென்றோம். இதில் மதியச் சாப்பாட்டிற்கு நேரம் நெருங்கியது. யாழ்ப்பாணம் முத்திரைச் சந்திக்கு அருகில் நாகலிங்கம் போசனசாலை என்ற சாப்பாட்டுக் கடை இருந்தது. அதில் சாப்பிட அழைத்துச் சென்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களை கீழே நிலத்தில் அமர்த்தி சாப்பாடு பரிமாற முற்பட்டார்கள். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை ஏற்றுகொள்ள மறுத்திருந்தோம்.

கொல்லன் கலட்டியைச் சேர்ந்த V.T.நடராசா என்ற ஆசிரியர் பொறுப்பாசிரியராக இருந்தார். இவர் எங்களிடம் "கடைக்காரர்கள் உங்களுக்கு மேசையில் இருத்தி சாப் பாடு தரமாட்டார்கள். அதனால் கீழிருந்த சாப்பிடுங்கள் என கேட்டுக் கொண்டார். நாங்கள் அதற்கு தரையில் இருந்து சாப்பிட மாட்டோம். எங்களுக்கு சாப்பாடு வேண்டாம் என பஸ்ஸில் வந்து அமர்ந்து கொண்டோம். பின்னர் எங்களுக்கான உணவுகள் பாசலில் கட்டப்பட்டு வழங்கப்பட்டது. குடிப்பதற்கான தண்ணீரும் வாளியில் வழங்கப் பட்டது. பஸ்ஸிலிருந்தே எமது சாப்பாட்டை சாப்பிட்டோம்.

இந்நிகழ்வு என்னால் முழுமையாக ஜீரணிக்க முடியாத ஒரு சம்பவமாக அமைந்தது. எனது வாழ்க்கையில் இச்சம்பவமானது உயர்சமூகத்திற்கு எதிரான உணர்வையும், இவ்சமூக அமைப்பில் இவ்வாறு வேறுபடுத்தப்படுகின்றோமே என்ற தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இச்சம்பவமே எனது எதிர்கால நடைமுறைகளுக்கு அடித்தளமிட்ட சம்பவமாகவும் அமைந்திருந்தது.

**பரணீ:**

**சுமார் எத்தனை பிள்ளைகள் இவ்வாறு பஸ்ஸில் சென்று அமர்ந்து கொண்டீர்கள்?**

**முருகன் சின்னையா :**

சுமார் பதினைந்து இருபது பிள்ளைகள் இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டோம். மொத்தமாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் இச்சுற்றுலாவில் பங்குபற்றினர்.

**பரணீ:**

**இவ் சம்பவம் இடம் பெற்ற காலத்தில் எத்தனையாம் ஆண்டில் நீங்கள் கல்வி கற்றீர்கள்?**

**முருகன் சின்னையா :**

இது எனக்கு நினைவில்லை. தரம் 8 இல் கல்வி கற்ற காலத்திலேயே நடைபெற்றது. கடைக்காரர்களுக்கு யார் யார் என்ன சாதியினர் என்பது தெரிந்திருக்காது என்றாலும் இவை ஆசிரியர்மாருடைய குள்ளத்தனங்கள் என்றே கூற வேண்டும்.

எனக்கு மனதில் தோன்றியது என்னவெனில் கல்வியை வழிநடத்துகின்ற ஆசிரியர்கள் இத்தகைய மனப்பாங்குடன் நடந்தியிருக்கிறார்கள் என்பதாகும். இது கவலைக்குரிய விடயம். இதற்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியர் V.T.நடராசா என்பவர் முன்னாள் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராவிருந்த ரவிராஜி னுடைய தகப்பனாராவார். அவர் கொல்லங்கலட்டி யில் நடேசபிள்ளை என்ற பாராளுமன்ற உறுப்பின ருடைய உறவினராவார்.

நான் குறிப்பிட வருவது என்னவெனில் மேட்டுக் குடி வர்க்கத்தினர், மக்களுக்கு சேவை செய்ய வென தெரிவு செய்யப்பட்டவர்கள் இவ்வாறு நடை முறை களுக்கு உறுதுணையாக இருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதில் வேடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான சம்பவம் என்னவெனில் சுற்றுலாவை ஒட்டி நடை பெற்ற கட்டுரைப் போட்டியில் நான் முதலாமிடத்தைப் பெற்றிருந்தேன்.

பரணீ:

இக்காலத்தில் உங்களுடைய பெற்றோர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையா? மேசைகளில் பின் வாங்குகளில் அமர்த்துவது, கிணற்றில் தண்ணீர் அள்ளுவதைத் தடுப்பது போன்றவற்றில் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையா?

முருகன் சின்னையா :

இல்லை.

இவ்வாறு நடத்தப்படுவது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. சமூகத்தில் பிரத்தியேகமாக எங்களுக்கு மட்டும் இது இடம் பெறவில்லை. வடமாகாணம் முழுவதும் என்ன நிலவியதோ அதுவே இங்கும் நிலவியமையால் எதிர்த்துப் போராடவில்லை. அதற்கு இசைந்து வாழ்பவனே ஒழுங்கான பிரஜை என்ற எண்ணமும் நிலவியது என்பதால் தாய் தந்தையரும் மௌனமாக இதனைச் சகித்துக் கொண்டார்கள். எனது தந்தையாரைப் பொறுத்தவரை இதனை எதிர்க்கும் சுபாவம் கொண்டவராகக் காணப்பட்டார். அக் காரணத்தாலேயே பழைய பாடசாலையில் இருந்து இந்தப் பாடசாலைக்கு மாற்றப்பட்டேன். காரணம் இங்கு உயர் வகுப்பு இருந்தாலும் இவ்வாறான சாதி முரண்பாடுகளின் காரணமாகவே இப்பாடசாலையில் என்னைச் சேர்ப்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

பாடசாலைக் கல்வி நிறைவின் பின்னர் என்ன செய்தீர்கள்? தொழில் கிடைத்ததா?

முருகன் சின்னையா :

பள்ளிக்கூடத்தில் இன்னொரு சம்பவம் நடைபெற்றது. வகுப்பு மட்டத்தில் தேநீர் விருந்து உபசாரம் நடைபெற்றது. தரம் எட்டில் கல்வி கற்கும் போது இவ் உபசாரம் நடைபெற்றது. அதன்போதும் எங்களுடைய வகுப்பாசிரியராக V.T. நடராசா இருந்தார்.

இவ்விருந்தில் வடை, வாழைப்பழம் வழங்கப் பட்டது. அதனை நாங்கள் வாங்கி உண்டோம். பின்னர் தேநீர் வழங்கும் வைபவத்தில் மூக்குப் பேணியிலும் எங் களுக்கு பேணியிலும் வழங்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட வர்களான நாங்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்திருந் தோம்.

இவர்கள் பெரிதும் வற்புறுத்தியும் நாங்கள் மறுப்பையே தெரிவித்தோம்.

பரணீ:

உங்களுடன் இருந்த உயர்சாதி வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இதற்காக ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா?

முருகன் சின்னையா :

அவர்கள் அதனை வேடிக்கை பார்க்கும் மனப்பாங்கில் இருந்தார்களே தவிர எங்களுக்காக குரல் கொடுக்கும் மனப்பான்மையில் அவர்கள் இருக்கவில்லை. அவர் களும் எங்களை வற்புறுத்தி குடிக்க வைக்கும் மனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கில் இருந்தார்கள்.

அநீதியைக் கண்டு எதிர்க்கும் மனப்பாங்கு மற்றவர்களிடம் கூட இருக்கவில்லை. எங்களை வழி நடத்தும் ஆசிரியர் திசைமாறி நடந்து கொண்ட போது ஏனையவர்களும் வேடிக்கை பார்ப்பவர்களாகவே நடந்து கொண்டார்கள்.

**பரணீ:**

**நீங்கள் விளையாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தீர்களா?**

**முருகன் சின்னையா :**

இல்லை. விளையாட்டில் நான் ஈடுபாடு கொண்டிருக்க வில்லை. மாறாக வாசிக்கும் பழக்கம் என்னிடம் இருந்தது.

அந்நாட்களில் மாணவர் விருத்திச் சங்கங்களால் பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை கையெழுத்துப் பத்திரிகையாக வெளிவந்தது. அதில் எமக்கு ஏற்படும் அநீதிகளை கட்டுரைகளாகவோ அல்லது கதைகளாகவோ எழுதியிருக்கின்றேன். இருப்பி னும் அவை கூட்டங்களில் வாசிக்கப்படுவதில்லை. பின்நாட்களில் அவை நூலகத்தில் போடப்படும். சிலர் இதனை வாசித்திருப்பார்கள்.

ஆனால் கூட்டத்தில் வாசிக்கப்படுவதில்லை. குரல் கொடுப்பதில் பொதுவாக நான் அடக்கமான எதிர்ப்புக்களை காட்டியிருக்கின்றேனே தவிர எழுந்து நின்று ராங்கியாக எதிர்த்துப் பேசும் சுபாவம் என்னிடம் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

நீங்கள் எவ்வாறான தொழிலை மேற்கொண்டீர்கள்?

முருகன் சின்னையா :

O/L முடித்ததன் பின்னர் படித்த வாலிபர் திட்டத்தில் வவுனிக் குளத்தில் காணி ஒன்று கிடைத்தது. இக் காணியில் நானும் எனது அப்புவுமாக வேலை செய்து கொண்டிருந்தோம். இதன்போது தமிழ் மொழி மூலம் கிளறிக்கல் பரீட்சைக்கு ஆட்களைச் சேர்க்கின்ற பரீட்சைக்கு விண்ணப்பித்தேன். அதில் சித்தி பெற்று எனது கல்வித் தகைமைகளை அனுப்பும்படி திறைசேரி யில் இருந்த கடிதம் வந்திருந்தது. அதில் கிளறிக்கல் பரீட்சையில் தெரிவாகி 27.04.1959 அன்று கல்வித் திணைக்களத்தில் நியமனம் கிடைத்ததால் கொழும்பு சென்றேன்.

பரணீ:

வேலையைப் பெற்றுக் கொள்வதில் உங்களுக்கு சாதிப்பாகுபாடு தொடர்பான பிரச்சினைகள் ஏதும் ஏற்பட்டதா?

முருகன் சின்னையா :

இல்லை. இது போட்டிப் பரீட்சை சார்ந்தது என்பதால் அவ்வாறான எதுவும் கிடைக்கவில்லை. இக் காலத்தில் 1959 ஆம் ஆண்டு காலத்திலேயே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் பாட சாலைகள் ஆரம்பிக்கப்பட்டது. மகாசபை உச்சத்தில் இருந்த காலம் என்பதால் அதே காலத்திலேயே எனக்கும் நியமனம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

பாடசாலைக் கழிப்பறைகளை பயன்படுத்தக் கூடியதாக இருந்ததா? சுத்தப்படுத்தும் வேலைகளை பாடசாலையே செய்ததா?

முருகன் சின்னையா :

இவற்றில் வேறுபாடு காட்டப்படவில்லை. அக்காலத்து பாடசாலைகளில் இன்றைய பாடசாலைகளில் ஏற்படுத் தப்பட்ட வசதிகளைப் போன்று வசதிகள் ஏற்படுத்தப் படவில்லை.

மலசலகூடம் பாவிப்பதை விட வெளிக் காணிகளையே அதிகமாக இதற்குப் பாவித்தார்கள். இதனால் துப்பரவுப் பிரச்சினைகள் இருக்கவில்லை.

பரணீ:

பண்டித்தலைச்சி அம்மன் ஆலயப் போராட்டத்தில் உங்களுடைய பங்களிப்புக்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

முருகன் சின்னையா :

இதற்கு முதல் நான் கொழும்பில் இருந்த காலத்தில் ஏற்றத்தாழ்வுகளால் ஏற்பட்ட மன விரக்தி என்னை நாஸ்திக போக்கிற்கு மாற்றியது.

சமூகக் கட்டமைப்புக்கு எதிரான மனோ நிலையும் ஏற்பட்டதால் இடதுசாரி இயக்கங்களில் தொடர்புகளை ஏற்படுத்தி வலுப்படுத்தினேன். காரணம் எனது எண்ணத்திற்கு உடன்பாடாக இடது சாரி இயக்கங்கள் இருந்தமையால் தொடர்புகள் வலுப் படுத்தப்பட்டது. கொழும்பில் இரண்டரை வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றி மட்டக்களப்பு அக்கரைப்பற்றிற்கு இடமாற்றம் பெற்றேன். இரண்டரை வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றேன். யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றதன் பின்னர் பாடசாலைக் காலத்தில் ஏற்பட்ட கசப்பான நினைவுகள் மீண்டும் என்னை நெருக்கியது என்றே கூறுவேன்.

யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதியில் அமையப் பெற்ற கல்விக் கந்தோருக்கு மாற்றம் பெற்று சென்றே போது வேண்டத்தகாதவராக நான் பார்க்கப் பட்டேன். எனக்கு கிளாக்கு உரிய மேசை வழங்கப்பட வில்லை. அதற்குப் பதிலாக வேறொரு மேசையில் Peon போல அமர்த்தப்பட்டேன்.

வேலையானது பலதும் பத்துமாக ஏதோவொரு வகையில் வழங்கப்பட்டது. இவை என்னை மீளவும் பாதிப்படையச் செய்தது. முன்பு குறிப்பிட்டது போல எதிர்த்துப் பேசும் சுபாவம் என்பது குறைவு என்பதால் அவற்றைச் சகித்துக் கொண்டு வேலை செய்தேன். இடதுசாரிக் கட்சிகளில் மிகவும் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினேன்.

சுப்பையா என்பவர் என்னுடைய உறவினரும் எனக்கு இளைமையானவரும் ஆவார். அவர் தீவிரமாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்.

அதனால் நானும் அவருடன் இணைந்து இயங்க ஆரம்பித்தேன்.

இறுதியில் அவருடைய சிபாரிசின் கீழ் கொமியூனிட்ஸ் கட்சியில் நானும் இணைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:
நீங்கள் இணைந்த காலகட்டத்தில் வேறு யார் யார் அங்கத்தவர்களாக இருந்தார்கள்?

முருகன் சின்னையா :
நான் இணைந்த நேரத்தில் கிருஸ்ணன் (எனது தங்கையின் கணவன்), காலம் சென்ற ஜேசுதாசன், டேவிட், நடராசா (கரச்சியில் விவசாயம் செய்தவர்), ஏ.கிருஸ்ணன் ஆகியோருடன் இணைந்து இயங்கத் தொடங்கினேன்.

இக்காலத்திலே "பொது இடத்தில் யாரையும் புறக்கணிக்கக் கூடாது" என்ற சட்டம் நிறைவேற்றப் பட்டது. இதற்கு தமிழரசுக் கட்சியும் ஆதரவு வழங்கியது.

இச்சட்டம் நிறைவேற்றப் பட்டதன் பின்னர் கச்சேரியில் மேல்மட்டத்தில் மாவிட்டபுர கோயில் திறந்து விட ஆலோசிக்கப்பட்டாலும் கோயில் நிர்வாகம் அதனை மறுத்திருந்தது. ஆசாரசீலர்களான கோயிலுக்குள் செல்லக் கூடிய சாதியினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என பத்திரிகையில் பிரசுரித்தது.

எங்களுடைய ஊரில் உள்ள இளைஞர்கள் ஒன்பது பத்துப் பேர் இணைந்து கார் ஒன்றில் மாவிட்டபுரம் கோயில் கொடியேற்றத்திற்கு சென்றிருந்தோம். இங்கு வவுனியா சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் ஒரு தொண்டர் படை உருவாக்கப் பட்டிருந்தது.

அவர்கள் கோயில் முன் வாசலில் இருந்து ஆட்களைப் பார்த்து தாழ்த்தப்பட்டவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குள் செல்லவிடாது தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

நாங்கள் காரில் போய் இறங்கியதை அவர்கள் முன் கூட்டியே அவதானித்திருக்கிறார்கள். நாங்கள் கோயிலுக்குள் செல்ல முற்பட்டபோது "எங்கிருந்து வருகிறீர்கள்" என தொண்டர் படையினர் வினவினர். அதற்கு நாங்கள் "மட்டுவிலில் இருந்து வருகின்றோம்" எனப் பதிலளித்தோம்.

உங்களை கோயிலுக்குள் அனுமதிக்க முடியாது என்றனர்.

நாங்கள் கோயிலினுள் சென்று வழிபட ஆசார சீலராக வந்திருக்கின்றோம். எங்களை அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம். அதற்கு அவர்கள் அவ்வாறு அனுமதிக்க முடியாது என்றனர். இக்கோயில் வளாகத்தினுள் தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் நான் சென்று சுந்தரலிங்கம் கோயிலிற்குள் செல்ல விடாது தடுத்தார் என முறைப்பாடு செய்தேன். கோயிலுக்குள் உட்செல்ல முடியாத காரணத்தால் திரும்பினோம்.

இரண்டு மூன்று நாட்களின் பின்னர் கோயிலிற் குள் உட்செல்வதற்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினால் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக நாங் களும் காலை ரயிலில் ஏறிச் சென்றிருந்தோம்.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் இருந்து மக்கள் இங்கு திரண்டிருந்தார்கள். கோயில் வளாகத் திற்கு சென்ற போது கோயிலிற்குள் செல்வதற்கு கோயில் கதவு பூட்டப்பட்டிருந்தது.

கோயில் முன் மண்டபத்தில் சத்தியாக்கிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தோம்.

சத்தியாக்கிரகத்தில் தேவாரங்களை ஒருவர் பாட மற்றவர்கள் இணைந்து பாட பஜனை போல பாடிக் கொண்டிருந்தோம்.

சத்தியாக்கிரகத்தின் இரண்டாம் நாள் செய்தி கிடைக்கப்பெற்று தாழ்த்தப்பட்டோர் இன்னும் கூடுதலாக திரண்டனர்.

இரண்டாம் நாள் லொறியில் முழுவதுமாக நாங்களும் மாவிட்டபுரம் கோயிலுக்குச் சென்றிருந் தோம். அங்கு கோயில் மண்டபத்தில் தண்ணீர் இறைக்கப்பட்டு நாங்கள் அமரக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. கோயிலின் முற்புறத்தில் கயிறும் கட்டப்பட்டிருந்தது. கோயில் முன் முற்றத்தில் நாங்கள் அமர்ந்திருந்தோம்.

தீண்டாமை வெகுஜன இயக்கம் மட்டுமல்ல M.C.சுப்பிரமணியம், பு.நல்லையா, புளத் திசங்கள எம்.பி சமரக் கொடியும் இப்போராட்டத்தை வந்து பார்வை யிட்டார்.

இலங்கை முழுவதும் இப் போராட்டம் பற்றிய செய்தி பரவியிருந்தது.

கோயில் முற்றத்தில் போராட்டத்திற்காக அமர்ந் திருந்தபோது இப்போராட்டத்திற்கு எதிரானவர்கள் எங்களை ஏளனமும் கிண்டல் செய்து கொண்டிருந் தார்கள்.

காலை பத்துமணியளவில் இராசையா (சனசமூக நிலையத் தலைவராக இருந்தவர்) என்ற எங்கள் இனத்தைச் சேர்ந்தவர். அவரின் காலில் யாரோ மிதித்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே ராசையா "யாரடா மிதிச்சது" என பெரிய சத்தத்துடன் கேட்டார். இதனோடு அமர்ந் திருந்தவர்கள் எல்லோரும் எழும்பினார்கள். இதிலிருந்து ஒருவர் இன்னொருவருடன் தள்ளுப்பட அது சண்டையாக மாறியது. இதன்போது கயிறுகள் எல்லாம் அறுக்கப்பட்டு, வேலிகள் எல்லாம் தகர்க்கப் பட்டு கோயிலுக்குள்ளும் சென்றார்கள். பொலிஸாருக்கு உடனே baton chargeக்கு உத்தரவிட்டப் பட்டது. எல்லாம் குளறுபடியாக மாற பொலிஸாரும் தடியடித் தாக்குதல்கள் மேற்கொண்டார்கள்.

கோயில் கதவுகளை எல்லாம் உதைக்கப்பட்டு திறக்கப்பட்டது.

அடிதடியால் எல்லாப் பக்கமும் மக்கள் சிதறுண்டார்கள். boots கால்களுடன் கோயிலிற்குள் வந்தார்கள் என்றும் கூறப்பட்டாலும் அதிலிருக்கும் உண்மை பொய் எனக்குத் தெரியவில்லை. கோயிலுக் குள் பாதுகாப்பிற்காக நின்ற சண்டியர்மாரையும் பிடித்த பொலிஸார் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள்.

இக்கலவரம் கோயில் தேரிற்கு முதன் நாள் நடைபெற்றது என்று நினைக்கின்றேன்.

இரண்டு மணியளவில் superintant சுந்தரலிங்கம் கோயிலுக்கு முன்னாலுள்ள வீட்டில் தாழ்த்தப் பட்டோரில் சில முக்கியமானவர்களை வரச் சொல்லி அழைப்பு விடுத்தார்.

நான் உட்பட அல்வாய் கணேசன், செனற்றர் நல்லையா, சுப்பிரமணியம் சென்றிருந்தோம்.

"இவ்வளவு நாளும் போராட்டம் என்று காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுது. ஆனால் நாளைக்கு தேர் நடக்க வேண்டும். கோயில் வழக்கப்படி கீரிமலையில் தீர்த்தமாடச் செல்ல வேண்டும். அப் போராட்டத்தினை இத்தோடு கைவிடுங்கோ" என சுந்தரலிங்கம் எங்களிடம் கேட்டுக் கொண்டார்.

அதற்கு நாங்கள் "இதுவரையும் நடைபெற்ற போராட்டத்திற்கான தீர்வு என்ன?" என்று கேட்டிருந் தோம். அதற்கு சுந்தரலிங்கம் "பொலிஸ் செய்ததைப் போல கட்டாயப்படுத்தி நாங்கள் செய்ய முடியாது" எங்களை போராட்டத்தை விட்டுவிட்டு கலைந்து போகும்படியும் கேட்டுக் கொண்டார். M.C.சுப்பிர மணியம் இதற்கு ஒப்புக் கொண்டார்.

ஆனால் எஸ்.ரி.என் கணேசன் சில பேருடன் கதைத்து விட்டு இதற்கான முடிவெடுக்க வேண்டும் என்பதால் கொஞ்ச நேரம் தரும்படி கேட்டுக் கொண்டார். அவருடன் நானும் சென்றேன். கந்தசாமி என்பவரைச் சந்தித்து கேட்டபோது அப்போராட்டத் தினை நிறுத்தினால் இவ்வளவு நாளும் இப் போராட்டத்தை நடத்தியதற்கு அர்த்தமில்லை என்றார்.

அதன் பின்னர் சுந்தரலிங்கத்திடம் சென்று போராட்டத்தினை நிறுத்துவதற்கு எங்களுக்கு சம்மதம் இல்லை எனத் தெரிவித்தோம். சுந்தரலிங்கம் அதற்கு பொது அமைதியை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றார்.

நாங்கள் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

பின்னர் கோயிலிற்குள் குவிக்கப்பட்ட பொலிஸாரால் எங்களுக்கு தாக்குதல் நடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து எல்லோரும் நாலாபக்கமும் சென்றார்கள்.

இத்தோடு இப் போராட்டம் நிறுத்தப்பட்டது.

நான் ஒருமுறை சுந்தரலிங்கம் என்னை கோயிலுக்குள் செல்லவிடாது தடுத்தார் எனக் கூறி மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததற்கு அமைய மல்லாகம் நீதிமன்றத்தில் இருந்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது படுபயங்கர மான காலகட்டமாக இருந்தது. காரணம் அல்வாய் கணேசன் ஒரு முறை பஸ்ஸில் செல்லும் போது மாவிட்டபுரத்தில் வைத்து அடித்தார்கள்.

வீதிக்கு போய் வருவதே பாதுகாப்பற்றதாக இருந்தது. அதனால் கார் பிடித்து தனியொருவராக அல்லாமல் நான்கு அல்லது ஐந்து பேராகவே நீதி மன்றத்திற்கு சென்றிருந்தோம்.

இதில் தமிழரசுக் கட்சி எங்களுக்காக வாதாடுவதற்காக கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளையை ஒழுங்குபடுத்தியது. அந்த வகையில் கதிரவேற்பிள்ளை எங்களுக்காக வாதாடினார்.

வழக்கில் என்னையும் சுந்தரலிங்கத்தையும் விசாரணை செய்தார்கள்.

முடிவில் சுந்தரலிங்கத்திற்கு ஐம்பது ரூபாய் குற்றப்பணம் கட்ட வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதனை மறுத்து சுந்தரலிங்கம் appeal செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் நீதிமன்றத்திலும் இக் குற்றம் ஊர்ஜிதப்படுத்தப் பட்டது.

அக்காலம் இலங்கை குடியரசாகாததனால் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கும் அவ்வழக்குச் சென்றது. இதிலும் அவரே குற்ற வாளியாகக் தீர்ப்பளிக்கப் பட்டார்.

சுந்தரலிங்கத்திற்கு எதிராக நடைபெற்ற இவ் வழக்கில் நானே முறைப்பாட்டாளர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வேறு கோயில்களிலும் இப்போராட்டத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வழக்கில் நான் எல்லோராலும் அறியப் பட்டதைத் தொடர்ந்து விசித்திரமாகவும், வேண்டத் தகாத ஒருவராகவும் ஆக்கப்பட்டேன். இருப்பினும் என்னுடைய அரசியல் தொடர்புகளால் என்னில் நேரடியாகக் தாக்க முடியவில்லை. இது எனக்கு பாதுகாப்பாக இருந்தது.

மாவிட்டபுரச் சம்பவத்திற்கு பின்னர் காலையில் வேலைக்காக சென்ற உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத் தில் இறங்கும் போது புகையிரத நிலையத்திற்கு அப்பால் வைத்து தாக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றது.

தீண்டாமை ஒழிப்பானது “சாதி அமைப்பு தகரட்டும் சாதி ஒழிப்பு ஓங்கட்டும்” என்ற வாசகத்தை முன்வைத்து சுன்னாகத்தில் இருந்து ஊர்வலம் நடத்தப்பட்டது. இவ் ஊர்வலம் பொலிஸாரால் தாக்கப்பட்டாலும் பின்னர் கூட்டம் நடைபெற்றது. அதன் எதிரொலியாக தேநீர்க் கடைப் பிரவேசம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பிரவேசம் என்பன எல்லா இடங்களிலும் பரவலாக நடைபெற்றது.

சங்கானை, அச்சுவேலியில் நடைபெற்று சாதிக் கலவரமாக மாறியது.

கொடிகாமத்தில் நடத்தப்பட்டு சாதிக் கலவர மாக மாற்றப்பட்டது.

சாவகச்சேரியில் நடத்தப்பட்ட போது சாதிக் கலவரமாக்கப்படவில்லை ஏனெனில் நாங்கள் தேநீர் கடைகளுக்கு சென்ற போது தேநீர் தந்தார்கள். ஆனால் ஒரு கடை மட்டும் Boiler கொதிக்கவில்லை. வியா பாரத்தை நிறுத்தியிருக்கிறேன்" என்று தேநீர் தர மறுத்தார்கள்.

அதற்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்தோம்.

பின்னர் வழக்கில் அவ் கடைக்காரர் தான் சாதிப்பாகுபாட்டிற்கு எதிரானவன் இல்லை என்றும் சமத்துவம் அளிப்பதாக வும் என தெரிவித்தார்.

பின்னர் நாங்கள் அவருடைய கடையிலும் சென்று தேநீர் குடித்து விட்டு நீதி மன்றத்தின் அடுத்த தவணையில் அதனை உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து அவ் வழக்கும் இல்லாமல் ஆக்கப்பட்டது.

அதன் பின்னர் சாவகச்சேரியில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலை அனைவரும் வழிபடும் வகையில் திறந்து விடும்படி கோயில் தர்மகர்த்தாவிற்கு கடிதம் ஒன்றை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் சார்பில் அனுப்பியிருந்தோம்.

அதில் ஒரு பிரதியை எம்.பி.நவரத்தினத்திற்கும் அனுப்பினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி முக்கியஸ்தர்கள் எல்லோருக்கும் அனுப்பியிருந்தோம்.

பொதுவான வேண்டுகோளாக துண்டுப் பிரசுரமும் வெளியிடப்பட்டது.

அதன்போது எம்.பி. சுப்பையாவை தன்னை வந்து சந்திக்குமாறு அழைப்பு விடுத்தார். சுப்பையா அவரைச் சந்தித்தபோது "இதுவொரு சமூகப் பிரச்சினை. நான் தனியே இப் பிரச்சினையை தீர்க்க முடியாது. இப்பிரச்சினை காலக் கிரமத்தில் தீர்க்கப் படும். இப்பிரச்சினையை தீவிரப் படுத்த வேண்டாம்" என கூறினார்.

இவ்வாறு கடிதம் அனுப்பியே பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் போராட்டம் நடைபெற்றது. பங்குனித் திங்கள் அன்று காலை ஆண்கள், பெண்கள் என ஆலயத்தினைச் சூழ்ந்தார்கள். இதற்கிடையில் ஆலயத்தினைச் சுற்றி தற்காலிகமாக முட்கம்பிவேலி அடிக்கப்பட்டிருந்தது. சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ் பெக்டராக இருந்த துரைசிங்கம் கம்பியை கழற்றி கோயில் வளாகத்தினுள் மக்களை அனுமதிக்குமாறு கூறினார்.

முட்கம்பிகள் கழற்றப்பட்டு நாங்கள் கோயில் வளாகத்தில் சென்றாலும் கோயில் கதவுகள் பூட்டப் பட்டிருந்தது.

உயர் சாதியினரும் கோயிலுக்கு வெளியிலேயே நின்றிருந்தார்கள். அனைவரும் கோயிலுக்கு வெளியிலே என்றால் அது சமத்துவமான நிலை என்ற வகையில் பொங்கல்களுக்கான ஆயத்தங்களைச் செய்தோம். தீர்த்தக் கேணியைச் சுற்றியும் முட்கம்பி அடிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது.

கேணியில் தண்ணீர் எடுக்க முடியாமையால் மடத்திற்கு அருகிலிருந்த கிணற்றிலிருந்து நீரைப் பெற்று பொங்கலைச் செய்திருந்தோம்.

அப்பொங்கலினை பொங்கிப் படைத்து அங்கிருந்த மக்களுக்கே நாங்கள் வழங்குவது வழக்கம். அவ்வாறே செய்திருந்தோம்.

அடுத்த திங்கட்கிழமை கோயிலுக்கு சென்ற போது கிணற்றின் துலா நீக்கப்பட்டு கிணற்றினுள் குப்பைகள் மற்றும் உமி கொட்டப்பட்டிருந்தது. இதனால் பொங்கல் செய்ய முடியவில்லை.

கற்பூரத் தினைக் கொளுத்திவிட்டு வீடு திரும்பி யிருந்தோம்.

மூன்றாவது பங்குனித் திங்களில் எல்லா ஊரி லிருந்தும் மக்கள் வந்திருந்தார்கள்.

பொங்கல் பொங்கு வதற்கான நீரை வேறு இடங்களில் இருந்து பெற்று மக்கள் பொங்கினார்கள்.

பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் "நாங்களும் பொங்கல் செய்ய வேண்டும். அதற்கான நீரை எடுப்பதற்கான கிணறு அசுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கேணியில் தண்ணீர் எடுக்கப் போகின்றோம்" என்றோம்.

அதற்கு பொலிஸார் கோயில் நிர்வாகத் தினால் கம்பி அடித்து பாதுகாக்கப்பட்டிருப்பதால் அதனை அத்து மீறிப் போக முடியாது என்று கூறினார்கள்.

**பரணீ:**

**மற்றவர்கள் எங்கிருந்து தண்ணீர் எடுத்தார்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சின்னையா :

அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள கிணறுகள், வயல் வெளிக் கிணறுகள் போன்றவற்றில் தண்ணீரை எடுத் தார்கள். தனிப்பட்டவர்களின் காணிகளில் நாங்கள் தண்ணீர் அள்ள முடியாது. இதனால் கேணியை எங்களுடைய பாவனைக்கு திறந்து விடும்படி பொலி ஸாரைக் கேட்டுக் கொண்டோம். பொலிஸார் அதற்கு கோயில் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி கேணியை பாவிக்க முடியாது எனக் கூறினர்.

அதன் பின்னர் நானும் சுப்பையாவும் கோயிலில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக பொலிஸ் நிலையத் திற்கு சென்று "நாங்கள் கோயில் வழிபாட்டுக்கென, நேர்த்திக்கடனுக்கென, பொங்கலுக்கென வந்திருக் கின்றோம். எங்களுக்கு தண்ணீரைப் பெற்றுக் கொள்ள அனுமதியில்லை." என முறைப்பாடு செய்தோம். அங்கிருந்த பொலிஸார் அவ்வாறு முறைப்பாடு செய்ய முடியாது என்றார்.

துரைசிங்கத்திடம் நாங்கள் சென்று எமது முறைப்பாட்டைப் பதிவு செய்யும்படி அவரிடம் கோரியதன் பின்னர் எங்களது முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டை பதிவு செய்ததன் பின்னர் பொங்குவதற்காக தண்ணீர் தேவைப்பட்டதால் கேணியைச் சுற்றி அடித்திருந்த கம்பி வேலியை பிரித்து கேணியில் தண்ணீர் அள்ள முடிவு செய்தோம்.

குறடு கொண்டு சென்றதனால் குறட்டினால் கம்பியை வெட்டியிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

குறட்டை எவ்வாறு கொண்டு சென்றீர்கள். செல்வக்கிளி உங்களுக்கு உதவி செய்திருக்கிறாரா? அவரே பானைக்குள் சுத்திக் கொண்டு வந்ததாக கூறியிருந்தார்.

முருகன் சின்னையா :

இதனை நாங்கள் எதிர்பார்த்ததனால் பைகளுக்கு வைத்து குறட்டைக் கொண்டு சென்றோம். குறிப்பிட்ட ஒருவரைச் சுட்டிச் கூறுவதானது சில சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும். பகிரங்கமாகச் சொல்வது சில பாதிப்புக்களை ஏற்படுத்தும். அதனை வெளிப் படையாக குறிப்பிட விரும்பவில்லை. கம்பியை சுப்பையா வெட்டினார்.

உடனே துரைசிங்கத்தின் கட்டளையின் கீழ் சுப்பையாவை பொலிஸார் கைது செய்தார்கள்.

நானும் கூட்டத்துடன் கூட்டமாக நின்றிருந் தாலும் என்னால் அதனை ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. காரணம் எல்லோரும் இதற்காக போராடுகின்ற போது ஒருவரை மட்டும் பொலிஸார் கைது செய்வதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குறைந்தது நாற்பது அல்லது ஐம்பது பேரை பிடித்துக் கொண்டு சென்றாலும் பரவாயில்லை. உடனே நான் பெரிதாக சத்தமிட்டபடி கம்பி வேலியை நோக்கி ஓடினேன்.

என்னுடன் இணைந்து மற்றவர்களும் பின்னால் வந்தார்கள். நான் வேலியை பிடித்து தள்ள பொலிஸார் என்னையும் கைது செய்தனர்.

பொலிஸாருக்கு Baton Charge உத்தரவு பிறப்பிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. அதனால் பொலிஸாரும் தாக்கத் தொடங்கி யிருந்தார்கள்.

எனக்கு தலையில் அடிபட்டதைத் தொடர்ந்து தலையில் இருந்து இரத்தம் கசிந்தது.

என்னை பொலிஸார் கோயிலில் அமைக்கப் பட்டிருந்த தற்காலிக பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்காக இழுத்த போது குண்டு ஒன்று வெடித்தது. இதனால் மக்கள் கலவரப்பட மேலும் இரண்டு மூன்று குண்டுகள் வெடித்தது.

என்னையும் சுப்பையாவையும் பொலிஸ் நிலை யத்தில் வைத்திருந்தார்கள். இக்குண்டு வெடிப்பால் ஒரு சிலர் காயமடைந்திருந்தார்கள்.

பின்னர் எங்களை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள்.

அதே நேரத்திலேயே குண்டு வெடிப்பால் காய மடைந்தவரையும் வைத்தியசாலையில் முதலுதவிக்காக கொண்டு வந்தார்கள்.

பின்னர் என்னையும் சுப்பையாவையும் பொலிஸ் நிலையத்திலுள்ள சிறையில் அடைத்தனர். அன்று முழுவதும் பொலிஸ் நிலையத்தில இருந்து மறுநாள் காலை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டோம்.

நீதவான் பத்து நாட்களுக்கு எங்களை றிமாண்ட் செய்யும் படி கட்டளை இட்டார்.

அவர்கள் எங்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலை யத்தில் றிமாண்டில் வைத்தார்கள். பத்து நாட்களின் பின்னர் நீதிமன்றத்தின் மூலம் பிணையில் விடுவிக்கப் பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வழக்கில் பிரபல வழக்கறிஞர் ராஜரத்தினம் என்பவர் எங்களுக்காக வாதாடி வழக்கினைத் தள்ளுபடி செய்தார்.

பின்னர் நாங்கள் குற்றவாளிகள் அல்ல என தீர்ப்பளிக்கப்பட்டது. கோயில் உற்சவ கால ஒழுங்கு பற்றி DRO மற்றும் AGA மட்டத்தில் கூட்டம் நடை பெற்றிருக்கிறது. அக்கூட்டத்தின் அறிக்கையானது பிரதி செய்யப்பட்டு அனைத்து திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தது. அதில் "பக்தர்களுக்கான சுகா தார ஒழுங்கு பேணப்படுவதுடன், பூசைக்கு வேண்டிய தண்ணீர் வசதிகளை பொலிஸார் ஏற்படுத்திக் கொடுப்பர்" என்ற ஒரு வசனம் அவ் அறிக்கையில் இடம் பெறுகின்றது.

அவ் அறிக்கையின் பிரதியை வழக்கறிஞர் ராஜரத்தினத்திடம் கொடுத்திருந்தோம். எங்களுடைய வழக்கறிஞர் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப் படும் என்ற கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க ஏன் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து உதவவில்லை என்று கேள்வி முன்வைக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்கு மேற்கொள்ளப்படவில்லை என அறிந்ததன் பின்னர் இவ் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன்போது எனக்கு ஏற்பட்ட மனநிலை பற்றி எனது கட்சித் தலைவர் உட்பட பலருக்கு கூறியிருக் கின்றேன். அதாவது வெகுஜனப் போராட்டம் என ஏற்பாடு செய்து நடத்தும் போது அதில் தனியொருவர் அல்லது இருவர் மட்டுமே தண்டனை அனுபவிக் கின்றனர் எனில் எமது மக்கள் மத்தியில் போராட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வோ அல்லது போராடும் மனநிலையோ இல்லை என்பதே அர்த்தம். நூற்றுக்கணக்கில் மக்கள் பங்கு பற்றி இதற்காகப் போராடியிருந்தால் இது வெகுஜனப் போராட்டம் எனலாம். இது எனக்கு ஒரு மன விரக்தியை ஏற்படுத்தி யிருந்தது. தமிழ் மக்களின் போராட்டத்தில் ஒரு பகுதி யினரை இழந்ததால் அப் போராட்டத்தை நசுக்கப் பட்டது எனில் மக்களிடம் போராடும் வலு இல்லை என்பதே அர்த்தம்.

எம்மவர்களிடம் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் பின்னடைவிலேயே உள்ளது.

பரணீ:

மாவிட்டபுரத்தில் உண்ணாவிரதம் இருந்த காலத்தில் ஒவ்வொரு நாளும் திருவிழா நடைபெற்றதா?

முருகன் சின்னையா :

கோயிலின் உட்புறத்தில் திருவிழா நடைபெற்றது.

பரணீ:

தேர் எரித்த பிரச்சினை பற்றி கூறுங்கள்?

முருகன் சின்னையா :

அச் சம்பவம் இடம் பெற்ற காலத்தில் நான் இங்கு இல்லை.

பரணீ:

நீங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்திலேயா தேர் எரிப்பு சம்பவம் இடம் பெற்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சின்னையா :

அச்சம்பவம் பின்பு தான் நடைபெற்றது. நான் றிமாண்டிலிருந்து வெளியேறி வேலைக்குச் சென்ற போது கணக்காளரான நல்லையா என்பவர் என்னை Peon மூலம் அழைத்தார்.

நான் அவரிடம் சென்ற போது "உன்னை யார் இங்கு வரச் சொன்னது?" என்று கேட்டார்.

நான் உரிமையுடன் எனது வேலைக்கு நான் வந்திருக்கின்றேன் என்றேன்.

லீவு எடுத்ததற்கு என்ன காரணத்தை போட்டிருக்கிறாய் என்று கேட்டார்.

நான் அதற்கு சொந்தக் காரணம் என எழுதியதைக் குறிப்பிட்டேன்.

எவ்வாறு நீ இப்படி எல்லாம் செய்யலாம் என்றும் கேட்டார்.

உடனே என்னை DE இடம் அனுப்பி அவர் சொல்வதன் படி செய்யுமாறு கூறினார்.

DEயிடம் சென்ற போது நான் முன்னர் செய்த வேலைகள் வேறொருவருக்கு மாற்றப்பட்டு எனக்கு புதிய வேலைகள் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறினார். நான் முன்னர் செய்த Paysheet தொடர்பான வேலைகள் இன்னொருவரிடம் மாற்றப்பட்டிருந்தது.

லீவு பெற்றுக் கொள்வதென்றால் DE தான் லீவை Approve செய்ய வேண்டும். ஏனையவர்கள் Approve செய்ய முடியாது என்றும் கூறினார். அதன் பின்னர் நான் யாழ்ப்பாணத்திற்கு இட மாற்றம் பெற்று எவ்வளவு காலம் என்பதை பார்த்திருக்கிறார்கள்.

எட்டு வருட நிறைவடைந்ததை அறிந்து Public



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Administrationக்கு அறிவித்து என்னை இடம் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். பின்னர் என்னை எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்திற்கு Clerk ஆக மாற்றம் செய்தார்கள். அத்துடன் எனது கட்சி இயக்கங்களில் இணைந்ததன் பின்னரே அதற்குள்ளும் இருக்கும் உட்பூசல்களையும் என்னால் அறிய முடிந்தது.

ஒருவரை ஒருவர் வழக்கம் போல ஏற்றுவதும் இறக்குவதும், ஒருவரைப் பற்றி ஒருவருக்கு சொல்வது மான செயற்பாடுகள் நடை பெற்றது. அவற்றைப் பார்க்கும் போது எனக்குள்ளேயே வெறுப்பு ஏற் பட்டது. அதனை விடவும் கட்சிகளை உயர்த்துகின்ற மக்களுக்குள்ளும் இவ் வேறுபாடுகளை உட்புகுத்தி குடும்பங்களுக்குள்ளும் ஒருவருக்கொருவர் ஐக்கிய மில்லாது செயற்படும் நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறான கட்சிக்காரர்களா பின்னர் பதவிக்கு வந்து நீதியான நிர்வாகத்தினை நடத்துவார்கள் என்ற சந்தேகம் எனக்குள் ஏற்பட்டது.

பிற்காலத்தில் இவ்வாறான செயல்கள் எமது ஊரிலும் நடைபெற்றது.

எனக்கும் சுப்பையாவிற்கும் இடையில் வேறு பாடுகள் ஏற்பட்டது.

குறிப்பாக கந்தசாமியர் மற்றும் K.S.சுப்பிர மணியர் என இரு பகுதியாக பிரிவினை ஏற்பட்டது. ஒரு நாள் இரவு கட்சிக் கூட்டம் இரகசியமாக நடை பெற்றபோது "கட்சியின் தலைமை ஒரு சீரழிவு வேலையில் ஈடுபடுகின்றது.

ஊர் மக்களுக்கிடையிலும் ஆட்களைச் சேர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியில் பிரிவினை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகிறது. அதற்கு சுப்பையா துணை நிற்கின்றார். சுப்பிரமணியத்தின் பக்கத்தில் துணை நிற்கின்றார். அதனால் இக் கட்சிக் கிளையைக் கலைத்து அவர்களின் தலையீடு இல்லாமல் இயங்குவோம்" என வெளிப்படையாகக் கூறினேன். சுப்பையா அதற்கு தான் அவ்வாறு நடக்கவில்லை என்றார். நான் அதற்கு மறுப்புத் தெரிவித்து சுப்பையா செய்ததை உறுதியுடன் கூறினேன். பின்னர் நான் அன்றிலிருந்து கட்சியிலிருந்து விலகுவதாக தெரிவித்து விலகினேன்.

இதன் பின்னர் இயக்கங்கள் உருவாகியது. EPRLF உடன் சுப்பையா இயங்கினார்.

புலிகள் இயக்கச் சார்புடன் சென்றவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டதாலும், என்னுடன் பகையில்லாத காரணத்தால் நானும் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களில் ஒருவராக்கப்பட்டேன். கந்தசாமியர் EPRLFற்குச் சென்றார்.

EPRLF ஆட்சிக்கு வந்தபோது சில பேர் பழிவாங்கப்பட்டனர்.

நான் வவுனியாவில் வேலை செய்த போது என்னையும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்தவர் என EPRLF சேர்ந்த ஒருவர் என்னை ஓரிடத்திற்கு வருமாறு அழைத்தார். நான் அவரிடம் வேலை நேரத்தில் வர முடியாது எனவும் சாப்பாடு நேரத்தில் அலுவலகத்திற்கு வருவேன் எனத் தெரிவித்தேன். எனக்கு விடயம் விளங்கியதால் OA அறிவித்து விட்டு பஸ் எடுத்து மல்லாவிக்குச் சென்றேன். அதற்கிடையில் என்னைத் தேடி அலுவலகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு வந்ததாக பின்பு அறிந்து கொண்டேன். இதில் நான் சொல்ல வருவது என்னவென்றால் எனக்கும் EPRLFக்கும் இடையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. கட்சியின் பிரிவினைகளாலும் ஏற்றத் தாழ்வுகளாலும் இவ்வாறான நிலை எனக்கு ஏற்பட்டது.

மல்லாவியில் ஐந்து ஆறு மாதம் சம்பளமும் இல்லாமல் தலை மறைவாக இருந்தேன்.

பின்னர் யாழ்ப்பாணம் வந்த இரண்டாவது மூன்றாவது நாள் இந்திய ராணுவத்தால் கைது செய்யப் பட்டு காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப் பட்டேன். மூன்று மாதத்தின் பின்னர் என்னை விடு தலை செய்தார்கள்.

வவுனியாவிற்கு பின்னர் வேலைக்கு செல்ல முடியவில்லை. காரணம் வேலைக்கு வந்தால் EPRLF இனர் அறிவிக்கும்படி கூறியிருந்தார்கள்.

பின்னர் திருகோணமலைக்கு சென்றேன். வட கிழக்கு மாகாணத்தின் DE ஆக மன்சூர் என்ற முஸ்லீம் இனத்தவர் பணியாற்றினார். அவர் ஏற்கனவே என்னைப் பற்றி அறிந்திருந்ததால் என்னை திருகோணமலையில் வேலை செய்வதற்கான அனுமதி வழங்குவதாகக் கேட்டார். நான் அதனை மறுக்க யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்வதாக கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கு என நியமித்தால் உனக்கு ஆதரவாக அன்றி எதிராகத் தான் செயற்படுவார்கள் என்று அவரே கூறினார். அதனால் நேரடியாக சாவச்சேரி இந்துக் கல்லூரிக்கு அவரே இட மாற்றத்தை வழங்குவதாக கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அப் பாடசாலையிலேயே கிளாக்காக கடமையாற்றினேன்.

கடமையேற்றதைத் தொடர்ந்து சாவகச்சேரி அதிபரான குகதாஸன் என்பவர் DEக்கு இரகசியமாக கடிதம் அனுப்பினார். ஏற்கனவே கிளாக்காக இரண்டு பேர் தனது பாடசாலையில் கடமையாற்றுவதாகவும் நான் மேலதிகமாக அனுப்பட்டிருப்பதாகவும் எழுதி கடிதம் அனுப்பினார்.

என்னுடைய இடமாற்றம் மாகாண அதிபரால் மேற்கொள்ளப்பட்டது என்பதால் மாற்றம் ஏதும் செய்ய முடியவில்லை. சம்பளம் தொடர்பான Pay sheet தொடர்பிலான வேலை செய்த அனுபவம் வேறொரு வருக்கும் இல்லை என்பதால் கிளாக் ஒருவர் தென் மராட்சி வலயத்திற்கு தேவைப்பட்டதைத் தொடர்ந்து சாவச்சேரி இந்துவிலிருந்து தென்மராட்சிக்கு வலயத்திற்கு மாற்றம் பெற்றேன்.

பின்னர் தென்மராட்சி வலயத்திலிருந்தே ஓய்வு பெற்றேன். இதில் வருத்தப்படவோ அல்லது பெருமைப்படவோ எதுவுமில்லை.

சீனச் சார்பு கொமியூனிட்ஸ் கட்சியின் அங்கத்துவ பத்திரத்தின் பக்கத்தில் மேற்கோள் ஒன்று போடப்பட்டிருக்கும். அவ் மேற்கோள் யாரால் கூறப் பட்டது என்பது எனக்கு நினைவில்லை. அவ் மேற்கோள் என்னவெனில் "ஒரு மனிதன் பிறக்கிறான் இறக்கிறான். அதற்கு இடைப்பட்ட காலம் வாழ்க்கை எனப்படுகிறது. அவன் தனது வாழ்நாளில் ஒடுக்கப் பட்ட மனித இனத்திற்கு எதிராக போராடினான் என்ற பெருமையுடன் அவன் சாகட்டும்" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் மேற்கோள் எனக்கு மிகவும் பிடித்தமானது. அதனையே இன்று வரை நம்புகின்றேன். காரணம் வெற்றி தோல்வி என்பது பிரச்சினையில்லை. பொருளாதார ரீதியாக நான் எவ்வாறும் இருக்கலாம்.

மனிதகுல விடுதலைக்காக ஏதோவொரு வகையில் போராடினேன். அதனையே நான் இன்று வரை கடைப்பிடிக்கின்றேன்.

தனிப்பட்ட எந்தவித காரணங்களோ விருப்பு வெறுப்போ இல்லை.

சமூக ரீதியாக நோக்கும் போது நான் ஒரு தோல்வியடைந்தவன்.

எனது மனைவி ஒரு ஆசிரியர். மனைவியின் பெயர் சரஸ்வதி. பொருளாதாரத்தில் நான் நல்ல நிலவரத்தில் இருந்திருக்க வேண்டியவன். இருப்பினும் மனைவியின் சிக்கன நடவடிக்கையாலேயே ஓரளவுக்கு இந்நிலையில் இருக்கின்றேன். சொந்தத்தில் எதனையும் சம்பாதிக்கவில்லை. இருப்பினும் அதற்காக வருத்தப் படவில்லை.

எந்தக் கட்சிகளையும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கவுமில்லை.

**பரணீ:**

**உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் ஐயா ?**

**முருகன் சின்னையா :**

எனக்கு இரட்டைப் பிள்ளைகள். இரண்டாவது மகன் மானவளையில் இருக் கிறார். நான் தற்போது வயல் செய்வதோடு ஓய்வூதி யத்தையும் பெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

உங்களுடைய அப்பாவின் பெயர் முருகன். இவ்வாறு பெயர் வைப்பதில் சாதிப்பிரச்சினை இருந்தனவா?

முருகன் சின்னையா :

அக் காலத்தில் இருந்திருக்கிறது.

என்னுடைய பெயரை விதானையாரிடம் பதியும் போது "சின்னையா" என்று கூறியிருக்கிறார்.

விதானை பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் "சின்னையன்" என்றே எழுதியிருக்கிறார்.

பாடசாலை டாப்பில் சின்னையா என்றே பதிந்திருந்தேன்.

இப்பெயர் விடயம் க.பொ.த.சாதாரண தரத் தினை எழுத நான் விண்ணப்பித்தபோது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் இருந்த பெயரும் டாப்பில் இருந்த பெயரும் வேறுபாட்டைக் காட்டியது. அதன் பின்னர் பரீட்சைக்கு சின்னையன் என்ற பெயருடனேயே தோற்றினேன்.

அதிலிருந்து சின்னையன் என்றே கையொப்ப மிடவும் தொடங்கினேன். இப்பெயரிலேயே இதுவரை விளங்கி வந்திருக்கின்றேன்.

வடமராட்சியைச்சேர்ந்த சிவா சின்னப்பொடி என்பவர் இது தொடர்பாக புத்தகம் எழுதியதாக அறிந்திருக் கின்றேன்.

பரணீ:

கொடிகாமத்தில் இடம் பெற்ற தேநீர்க்கடைப் பிரவேசம் பற்றி தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சின்னையா :

சம்பவம் பற்றி அறிந்திருந்தாலும் இதற்கும் எனக்கும் நேரடித் தொடர்பு இல்லை.

இதில் என்னுடைய மச்சான் கிருஸ்ணன் பங்கு பற்றினார். இதில் பங்கெடுத்தவர்களைப் பிடித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அடைந்தனர். அக்காலம் நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இச்செய்தியை நான் தொலைபேசி மூலமாக அறிந்ததைத் தொடர்ந்து கட்சிக்காரர்களுடன் கதைத்து வழக்கறிஞர் அன்ரனியுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்றேன். பொலிஸ் நிலையத்திற்கு வந்து அவர்களை விடுத்தேன். அவர்களுக்கான வழக்கு பின்னர் இடம் பெற்றிருந்தது. அத்துமீறிப் பிரவேசித்தது என்பதற்காக வழக்குத் தொடரப்பட்டது.

பரணீ:

பாராளுமன்ற உறுப்பினர் சுந்தரலிங்கம் உங்களை ஆலயத்திற்குள் உட்பிரவேசிக்க அனுமதிக்கவில்லை என நீங்கள் மட்டுமா அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தீர்கள்?

முருகன் சின்னையா :

இல்லை. அது தொடர்பாக பல இடங்களில் பலர் இவருக்கு எதிராக முறைப்பாட்டைத் தொடர்ந்திருந்தார்கள். இருப்பினும் கதிரவேற்பிள்ளை இவ் முறைப்பாடுகளில் எனது முறைப்பாட்டை எடுத்து நடத்த முன்வந்தார். காரணம் நீதிமன்றத்தில் நின்றுபிடித்து ஒழுங்காக சாட்சியம் அழிக்கக்கூடியவருடைய முறைப்பாட்டை தெரிவு செய்ய வேண்டும் என்பதற்காக எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாட்டை எடுத்து வழக்குத் தாக்கல் செய்தார். இவ்வாறு கதிரவேற்பிள்ளையை தொடர்புபடுத்து வதில் டானியலின் பங்கும் முக்கியமானது.

**பரணீ:**

**இவ்வாறான உங்களுடைய பிரச்சினை தொடர்பாக கட்டுரைகள் ஏதாவது எழுதியிருக்கின்றீர்களா?**

**முருகன் சின்னையா :**

தீண்டாமை வெகுஜன இயக்கத்தின் மலர் ஒன்றில் கிருஸ்ணன் என்ற பெயரில் ஒரு கட்டுரை எழுதி யிருந்தேன்.

அரசாங்க ஊழியர் என்பதால் பிரச்சினை ஏற்படக் கூடாது என்பதற்காகவே மாற்றுப் பெயரில் அக் கட்டுரையை எழுதியிருந்தேன்.

**பரணீ:**

**இன்று உங்களுடைய பார்வையில் இச் சாதிப்பிரச்சினைகள் எவ்வாறிருக்கிறது?**

**முருகன் சின்னையா :**

உலகம் முன்பிருந்தது போலல்லாது மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. தினமும் மாற்றமடைவது போல இப் பிரச்சினைகளும் அதாவது சாதியமைப்பில் முன்பைப் போல நேரடியான வலுவான தாக்கம் குறைவு. ஆனால் மறைமுகமாக இன்றும் நிலவுகிறது எனது அபிப்பிராயம். இதனை நுட்பமாகப் பார்ப்பவர் களாலேயே தெரிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

**எவ்வாறான மாற்றம் வந்தால் இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என நம்புகிறீர்கள்?**

முருகன் சின்னையா :

பொருளாதார சமத்துவம் கிடைத்தால் இப் பிரச்சினை தீர்வடையலாம். அதிலும் முற்றுமுழுதாக தீர்வு கிடைக்கும் என்பதிலும் எனக்கு நம்பிக்கையில்லை. ஒரு காலத்தில் அரசியல் இயக்கங்களில் ஈடுபடுகின்றபோது பொருளாதார சமத்துவம் ஏற்பட்டால் இச் சாதிப் பிரச்சினை தீர்வடையும் என்று நம்பியே செயற் பட்டேன். இன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு என மக்கள் முன்னேறியிருந்தாலும், பொருளாதார சமத்து வம் ஏற்பட்டிருந்தாலும் இப் பிரச்சினை தீருமா என்பது சந்தேகம் தான். ஒன்றுக் கொன்று இரண்டு சக்திகளுக் கிடையிலான சமத்துவமே ஒரு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இதில் போதுமான விளக்கம் இல்லை. ராமராச்சியத்தில் புலியும் மானும் ஒரே ஓடையில் தண்ணீர் குடித்ததாக கூறப்படுகிறது. இது நடை முறையில் எவ்வளவு தூரம் உண்மையில் சாத்தியமாகும் என்பது கேள்விக்குரியதாகும்.

பொருளாதார நிலையில் எங்களுடைய சமூகத்தவர் நல்ல முன்னேற்றகரமான நிலையில் இருக்கிறார்கள்.

கண்ணன் கோயில் ஒன்று இங்கு காணப்படு கிறது. இதில் சாமியைத் தூக்குவதற்கு அனுமதியில்லை என்ற சிறு மனக் குழப்பத்தில் எங்களுடைய சமூகத்தவர் அக்கோயிலுக்கு செல்வது குறைவு. நாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே எங்களுக்கான கோயிலை உருவாக்க வேண்டும் என்ற ரீதியில் அதற்கான முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்னொரு விடயம் என்னவெனில் மானா வளையில் பிராமண சமூகத்தவரின் கோயில் என நெல்லியடிப் பிள்ளையார் கோயில் முன்பு காணப் பட்டது.

நெல்லியடிப் பிள்ளையார் கோயிலின் ஐயர் மார் இப்போது வேறு இடங்களுக்கு சென்று விட்டார்கள். அக்கோயிலின் மனேச்சர் எங்களை தங்களுடைய கோயிலுக்கு வருமாறும் அழைப்பதுடன், பூசைகளை யும் எங்களுக்காக தருகிறார்கள்.

இவ்வாறான வேறுபாடுகளை புரிந்து கொள்ள முடியவில்லை.

எதிர்காலத்தில் இவை எவ்வாறு மாற்றமடையும் என்பதையும் சொல்லத் தெரியவில்லை.

நீங்கள் ஒரு பத்திரிகையாளன் என்பதால் இன்னொரு விடயத்தையும் கூற விரும்புகின்றேன். கனடாவில் இருந்து ஒருவர் தினக்குரல் பத்திரிகையில் வாக்கிய பஞ்சாங்கமோ திருக்கணித பஞ்சாங்கமா சரியானது என்பது குறித்து கட்டுரை எழுதியிருந்தார். நான் அதற்கு என்னுடைய அபிப்பிராயத்தை வைத்து பதில் கட்டுரை எழுதி தினக்குரலுக்கு எழுதினேன். இதில் நான் கூற முற்படுவது என்னவெனில் யாரிடம் ஆதிக்கமிருக்கின்றதோ அவ் ஆதிக்கம் கைநழுவிப் போவதை ஆதிக்ககாரன் விரும்ப மாட்டான். இவ் ஆதிக்கத்தை நிலை நிறுவத்துவதற்கு உண்மைக்கு பதிலாக ஏகபோக அடக்குமுறையையே கையாளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். முன்னர் கிரக மாற்றங்கள் ஏற்படும் போது வாக்கியத்திற்கும் திருக் கணித பஞ்சாங்கத்திற்கும் இடையில் வேறுபாடு ஏற்படுவதுண்டு. இவ்வேறுபாடு வரும் போது இங்கு பாலசுப்பிரமணிய ஐயர் அதற்கான தெளிவை, நியாயத்தை வெளிப்படுத்தும் துண்டுப் பிரசுரங்களை அடித்து வெளியிடுவார். இச்செயற் பாட்டை வாக்கிய பஞ்சாங்கக்காரர்கள் விரும்ப மாட்டார்கள். இவ்முரண்பாட்டால் அங்குள்ள சண்டியர்மார்களுக்கு சாராயம் வாங்கிக் கொடுத்து, தற்போது ஆவா குழு செயற்படுவது போல எங் களுடைய ஐயரைத் தாக்கும்படி அனுப்பினார்கள். அவர்கள் இங்கு அவர்ளுடைய வீட்டிற்கு முன்னால் வந்து அட்டகாசம் செய்தார்கள். எங்களுடைய ஊருக்குள் இரண்டு பிராமணக் குடிகள் மட்டுமே காணப்பட்டது.

எங்களுடைய ஊரில் வேறொருவர் நுழைந்து இவ்வாறு செய்தது எங்களுடைய சமூகத்தவர்களுக்கு பிடிக்கவில்லை. எங்களுடைய சமூகத்தவர் ஆயுதங் களுடன் காரை சுற்றி நெருங்கியதும் தாக்குதலுக் காக வந்தவர்கள் ஓடிவிட்டார்கள்.

அதன் பின்னர் ஐயருக்கு எங்களுடைய சமூகத்தவரில் ஒரு நம்பிக்கை.

தனக்கொரு பாதுகாப்பு என நீண்டகாலமாக தனது இருப்பை மாற்றாது இங்கேயே வசித்தார்.

இவ் பால சுப்பிரமணிய ஐயர் நன்றாகப் படித்த மனிதர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றியவர். இருப்பினும் அவரது நடத்தை மாற்றத்தால் கடமையிலிருந்து விலகினார். பிரித்தானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவால் வழங்கப்படு கின்ற FRS பட்டம் அவருக்கு கிடைத்திருந்தது. எதையும் விஞ்ஞான ரீதியில் விளங்கிக் கொள்ளும் திறமை அவரிடம் இருந்தது.

அவர் "விண்ணூல் விரிவு" என்ற வானசாஸ்திரம் தொடர்பான புத்தகத்தை எழுதினார். பின்னர் அதனை வெளியிடுவதற்கான நிதிப்பற்றாக் குறையால் பஞ்சாங் கங்களில் அப்புத்தகத்தினை வெளியிடுவதற்கான நிதியுதவி கேட்டு விளம்பரத்தை வெளியிட்டிருந்தார். பாராளுமன்ற உறுப்பினரான குமாரசாமி அதற்கு 100 ரூபா பங்களித்திருந்தார். அதன் பின்னர் எவரும் இதற்காக பங்களிக்கவில்லை. அவர் இந்நூலை வெளியிடுவதற்கான ஆயத்தங்களை மேற் கொண்டி ருந்த போது அவருடைய வீடு தீப்பிடித்து எரிந்தது. சிலர் இச் சம்பவம் இதற்கு எதிரானவர்களாலேயே மேற் கொள்ளப்பட்டது எனவும் கூறினர்.

விண்ணூல் விரிவு என்ற நூல் வெளிவந்தால் வாக்கிய பஞ்சாங்கத்தின் சில உண்மைகளை வெளி யாக்கி விடும் என்பதால் அந் நூலையும் எரிப்பதற்கா கவே வீடும் எரிக்கப் பட்டிருக்கலாம் எனவும் கூறப் பட்டது. அப்புத்தகத்திற்கு என்ன நடந்தது என்பது இதுவரை எவருக்கும் தெரியாது. இச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டியே நான் தினக்குரலிற்கு கட்டுரையை எழுதினேன். உண்மைகளை வெளிக்கொணருவதற்காக குரல் கொடுக்க ஆரம்பித் தால் அக் குரல் வளையே நசுக்கப்படும். இதனை நசுக்குவது ஆதிக்க சக்தியே தவிர வேறொன்றும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

உங்களுடைய சாதிப்பிரச்சினையில் உங்களுடன் இயங்கியவர்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

முருகன் சின்னையா :

எங்களுடைய காலகட்டத்தில் வாலிபராக இருந்த சகலரும் பங்கேற்றிருந்தார்கள். இன்றைக்கும் முரண்பட்டிருந்தாலும் கூட ஒன்றாக இருந்து இயங்கிய சக்தியினாலேயே எங்களால் இயங்க முடிந்தது. தனிப்பட்ட ஒருவர் இருவரால் இவ்வாறு வெற்றி களைக் கண்டோம் என்று கூற முடியாது.

எல்லோருக் கும் இதில் பங்கு இருந்தது. ஐக்கியம் இருந்தது. எல்லோருக்கும் தேவையும் இருந்தது. இன்று இவை எல்லாம் தனித்தனிப் போக்காக மாற்றமடைந்துள்ளது.

பரணீ:

சாதிக்குள்ளேயே சாதி பார்ப்பது பற்றி உங்களுடைய கருத்து என்ன?

முருகன் சின்னையா :

இதுவொரு படுகேவலமான முறை. சிறுபான்மைத் தமிழர் மகாசபை கூட காலத்திற்கு காலம் தலைமை மாற்றமடைந்தது. ஆரம்பத்தில் பள்ளரின் தலைமையில் இருந்தது.

ஆரம்பத்தில் வடமராட்சியைச் சேர்ந்த சூரன், நாகம்மா செல்லத்துரை, கவிஞர் செல்லையா என பள்ளர் சமூகத்தவரின் தலைமையில் இயங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் திருவள்ளுவர் மகாசபை என பிரிவினையாகியது.

சாதி தலித்தியம் பற்றி முறையான ஆய்வுகளைச் செய்தவர்களில் அம்பேத்கார் குறிப்பிடத்தக்கவர். அம்பேத்கார் பற்றிய தகவல்கள் தமிழில் அதிகளவு வெளிவரவில்லை காரணம் அவர் இடதுசாரி இல்லை என்பதாக இருக்கலாம் இந்திய இடதுசாரி கொமியூனிஸ்ட்களே இவ்வாறான புத்தகங்களை முன்பு மொழிபெயர்த்து இங்கும் வெளியிட்டார்கள். அம்பேத்காருடைய ஆய்வுகளை மையமாகக் கொண்டு சிறுபான்மைத் தமிழர் மகாசபை இயங்கியிருந்தால் சாதிக்குள் சாதி பார்ப்பது என்பது தோன்றியிருக்காது.

பொதுவான மையக் கருத்தில் இயங்கியிருப்பின் மகா சபை இன்றும் கூட நிலைத்திருந்திருக்கும். மற்றும் அரசியல் கட்சிகளும் இதற்கு ஒரு காரண மாகும். அரசியலில் செல்வாக்குச் செலுத்த போட்டி போட்டமையால் மையக் கருத்தில் இருந்து நழுவ வேண்டி ஏற்பட்டது.

சோவியத் கொமியூனிட்ஸ்ட் கட்சி, மொஸ்கோ என்ற வேறுபாடு எங்களுடைய மகாசபையைப் பிரிக்கும் அவல நிலையை ஏற்படுத்தியது.

தலித்தியம் எனறு சொல்லப் பட்ட சகல சாதியையும் உள்ளடக்கியதை பின்பற்ற வேண்டும் சாதிக்குள் சாதி பார்ப்பது என்பது ஒருவகை சாதி வெறி யாகும். வர்க்க முரண்பாடுகள், பதவி முரண் பாடுகள் காணப்படுகிறது. படித்த பகுதி படிக்காத பகுதியினரை புறக்கணிக்கின்றது. செல்வ வளம் கூடிய பகுதி பணபலம் அற்ற பகுதியை புறக்கணிக்கிறது. இவ்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றான வேற்றுமை அதிகமே தவிர ஒற்றுமை குறைவாகவே உள்ளது. இதனை படித்தவர்களும், பத்திரிகைகளுமே தெளிவுபடுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக நிறுவனத்தின் ஆவணகம்

நூலக நிறுவனத்தின் பல்லூடக நூலகத்தில்
(www.noolaham.org,
www.noolaham.media)
முருகன் சின்னையா
வாய்மொழி வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
பதிவு செய்தவர் : க.பரணீதரன்
காலம் : 2020
நேரம்: 1 மணி 49 நிமிடம் 52 செக்கன்
https://aavanaham.org/islandora/object/noolaham%3A32556



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தரம் 8 கல்வி கற்கும் போது வடமாகாண கல்விச் சுற்றுலா பாடசாலையால் ஒழுங்கமைக்கப்பட்டது. இக்கல்விச் சுற்றுலாவில் பல இடங்களுக்குச் சென்று இடையில் யாழ்ப்பாண நகருக்குச் சென்றோம். இதில் மதியச் சாப்பாட்டிற்கு நேரம் நெருங்கியது. யாழ்ப்பாணம் முத்திரைச் சந்திக்கு அருகில் நாகலிங்கம் போசனசாலை என்ற சாப்பாட்டுக் கடை இருந்தது. அதில் சாப்பிட அழைத்துச் சென்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களை கீழே நிலத்தில் அமர்த்தி சாப்பாடு பரிமாற முற்பட்டார்கள். நாங்கள் அதனை ஏற்றுகொள்ள மறுத்திருந்தோம்.

கொல்லன் கலட்டியைச் சேர்ந்த வி.ரி.நடராசா என்ற ஆசிரியர் பொறுப்பாசிரியராக இருந்தார். இவர் எங்களிடம் "கடைக்காரர்கள் உங்களுக்கு மேசையில் இருத்தி சாப்பாடு தரமாட்டார்கள். அதனால் கீழிருந்த சாப்பிடுங்கள்" என கேட்டுக் கொண்டார். நாங்கள் அதற்கு தரையில் இருந்து சாப்பிட மாட்டோம். எங்களுக்கு சாப்பாடு வேண்டாம் என பஸ்ஸில் வந்து அமர்ந்து கொண்டோம். பின்னர் எங்களுக்கான உணவுகள் பாசலில் கட்டப்பட்டு வழங்கப்பட்டது. குடிப்பதற்கான தண்ணீரும் வாளியில் வழங்கப்பட்டது. பஸ்ஸிலிருந்தே எமது சாப்பாட்டை சாப்பிட்டோம்.

இந்நிகழ்வு என்னால் முழுமையாக ஜீரணிக்க முடியாத ஒரு சம்பவமாக அமைந்தது. எனது வாழ்க்கையில் இச்சம்பவமானது உயர்சமூகத்திற்கு எதிரான உணர்வையும், இவ்சமூக அமைப்பில் இவ்வாறு வேறுபடுத்தப்படுகின்றோமே என்ற தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இச்சம்பவமே எனது எதிர்கால நடைமுறைகளுக்கு அடித்தளமிட்ட சம்பவமாகவும் அமைந்திருந்தது.

- முருகன் சின்னையா

ISBN : 9786246601249
9786246601249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org